**செய்தி வெளியீடு எண்: 328** **நாள்: 07.06.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டில் சொத்து உரிமையாளர்கள் வாடகைதாரர்களுக்கு இடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்தின் மீது இருதரப்பாருக்கும் உரிய உரிமைகளைப் பாதுகாக்க தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம் 2017 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் குறித்து விளக்கம் அளித்து இணையதளம் மூலமாக விண்ணப்பித்தல் குறித்து கோட்டாட்சியர் / வாடகை அதிகாரிகளுக்கான செயல்முறை விளக்கப் பயிற்சி வகுப்பானது 07.06.2019 ம் தேதியன்று சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட்டது.

சென்னை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், திரு. ச.கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்று நிகழ்ச்சியினைத் துவக்கி வைத்தார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டில், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார். சென்னை, ஃபாக்ஸ் மண்டல் & அசோசியேட்ஸ், வழக்கறிஞர் திரு.பி.ஜெயபிரகாஷ் அவர்கள் சட்டம் குறித்து விளக்கம் அளித்தார்.

தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனம் மற்றும் சென்னை சி.எம்.எஸ் பிரைவேட் லிமிடெட், ஆகியோர் www.tenancy.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பம் செய்வது மற்றும் தொடர் நடவடிக்கை எடுப்பது குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

2. வாடகைதாரர் மற்றும் உரிமையாளர் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி வாடகையை முறைப்படுத்துவதும், வாடகைதாரர் மற்றும் உரிமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைச் சமன் செய்வதும், இப்புதிய சட்டத்தின் நோக்கங்களாகும். இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வாடகை அதிகாரியிடம் அதாவது வருவாய்க் கோட்ட அலுவலர் / தனித் துணை ஆட்சியரிடம் அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் எழுத்து மூலம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென இச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் 22.02.2019–ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட போது அந்த தேதிக்கு முன்னர் எழுதப்படாத ஒப்பந்தங்களை எழுத்து மூலமாக ஏற்படுத்தி பதிவு செய்வதற்கு 90 தினங்கள் அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது இந்த அவகாச காலமானது 120 தினங்கள் அதிகரிக்கப்பட்டு மொத்தம் 210 தினங்கள் வரை ஒப்பந்தங்களை எழுத்து மூலமாகப் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எழுத்து வடிவிலான வாடகை ஒப்பந்தமானது சம்மந்தப்பட்ட சொத்து உரிமையாளர் அல்லது சொத்து மேலாளர் அல்லது வாடகைதாரரால் இச்சட்டத்தின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

இப்பயிற்சி வகுப்பில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் நீங்கலாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து தலா ஒரு சார் ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர் / துணை ஆட்சியர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயலாளர், திரு.பா.கணேசன் மற்றும் தலைமை வருவாய் அலுவலர்,

திரு. க.சக்திமணி ஆகியோர் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய துணை செயலாளர் (வருவாய்), அ.பாமிதா பேகம் நன்றியுரை வழங்கினார்.

இதர வருவாய் கோட்ட அலுவலர்கள் / தனித் துணை ஆட்சியர்களுக்கு மண்டல அளவிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட இருப்பதாகவும், இந்த சட்டம் மற்றும் இணையதளம் குறித்து பொது மக்கள் தமக்குரிய சந்தேகத்தினை நிவர்த்தி செய்வதற்கு **1800 599 01234** என்ற இலவச தொலைபேசி எண் ஒரு வார காலத்திற்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, முதன்மைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதன்மைச் செயலாளர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித் துறை,
சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**